# பலிபீடத்தின் கீழுள்ள ஆத்துமாக்கள் யார்?

2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

ஆறாம் எக்காளத்தின் கீழ் என்ன நடக்கிறதென்று பாருங்கள். அவை யூதர்களின் மேல் அவிழ்த்து விடப்பட்டன. யூதர்கள் துன்புறுத்தப்பட்டனர். இரண்டாயிரம் ஆண்டுகளாக கட்டப்பட்டிருந்த இயற்கைக்கு மேம்பட்ட பிசாசுகள், பிறகு ஸ்டாலின், ஹிட்லர் போன்றவர்களால் யூதர்களின் மேல் அவிழ்த்து விடப்பட்டன



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-07-19M எக்காளப் பண்டிகை

125 ஹிட்லரும் மற்றவர்களும் யூதர்களைத் துன்புறுத்தி அப்படிப்பட்ட செயல்களைப் புரிந்தபோது... கவனியுங்கள், அவர்கள்... ஸ்டாலின், ஹிட்லர் போன்ற சர்வாதிகாரிகள் எழும்பி (நமக்கு நேரமிருந்தால், புதிதாக வந்துள்ள சிலருக்கு அதை மறுபடியுமாக கூறலாம். அதை நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம்), அதே காலத்தில் ஜெர்மனியிலும் மற்ற நாடுகளிலும்... யூதர்கள் எல்லா நாடுகளிலும் சிதறியிருந்தனர். ஆனால் கடந்த இருபது ஆண்டுகளாக யூதர்களுக்கு விரோதமாக கொடூரமான துன்புறுத்தல் எழுந்தது.

126 அவர்களுடைய சரீரங்களை சுட்டெரித்து, அவர்கள் சாம்பலை நிலத்துக்கு உரமாக உபயோகித்த அந்த இடங்களுக்கு நான் சென்றிருக்கிறேன் - யூத பிள்ளைகள், பெண்கள் எல்லோருமே. ஆனால் அவர்கள் அதை மறுக்கின்றனர். அது நடந்த இடத்திற்கு அவர்களைக் கொண்டு சென்று காண்பியுங்கள். அது இஸ்ரவேலருக்கு விரோதமாக வழக்கமாக நடந்த துன்புறுத்தல். ஏனெனில் யூதனை பாவநிவர்த்திக்கு அழைக்கவேண்டிய நேரம் அதுவே. அவன் இயற்கை ஆட்டுக்குட்டியின் பாவநிவர்த்தியின் கீழ் இன்னமும் இருக்கிறான். ஆனால் உண்மையான தேவ ஆட்டுக்குட்டியே பாவநிவர்த்தி அளிக்கக்கூடியவராயிருக்கிறார். யூதனோ அதைப் புறக்கணித்தான், அந்த இரத்தப்பழி அன்று முதல் அவன் மேல் உள்ளது.

127 கவனியுங்கள், ஜனங்களை ஆயத் தப்படுத்துதல். அப்படியானால் ஏழாம் எக்காளமும் ஏழாம் முத்திரையும் எவ்வ ளவோ பிழையின்றி பொருந்துவதைப் பாருங்கள். யூதர்களின் துன்புறுத்துதல்.

வெளிப்படுத்தல் 9ம் அதிகாரம் 13ம் வசனத்தில் (இப்பொழுது கூர்ந்து கவனி யுங்கள்), ஆறாம் எக்காளத்தின் கீழ் (வெளிப்படுத்தல் 9:13), ஆறாம் எக்காளத் தின் கீழ் ஐபிராத்து நதியண்டையிலே கட்டப்பட்டிருந்த 200,000 குதிரை வீரர்கள் அவிழ்த்து விடப்பட்டனர் (வேதாகமத்தில் வெளி 9:16ல், இருபது கோடி என்றுள்ளது - தமிழாக்கியோன்).

உலகத்திலே மொத்தம் 200,000 குதிரை வீரர்கள் இல்லை, ஆனால் இங்கு 200,000 குதிரை வீரர்கள் உள்ளனர்.

இதை கவனியுங்கள் (நீங்கள் இதைக் குறித்துக் கொண்டு, பின்பு படிக்க விரும்பு கிறேன்).

அவை இயற்கை குதிரைகள் அல்ல. அவைகளுடைய வாய்களிலிருந்து அக்கினி புறப்பட்டது.

குதிரையின் மேல் ஏறியிருந்தவர்கள் அக்கினி நிறமான மார்க்கவசங்களை உடையவர்களாயிருந்தனர்.

குதிரைகளின் வால்கள் பாம்புகளுக்கு ஒப்பானவைகளாகவும், அதன் முனையில் பாம்பின் தலையுள்ளவைகளுமாயிருந்தன. அவை கடிக்கும். பாருங்கள்? அவை ஆவிக் குதிரைகள், பிசாசின் ஆவிகள், குதிரை வீரர்கள்.

இத்தனை ஆண்டுகளாக ஐபிராத்து நதியண்டையில் கட்டப்பட்ட இயற்கைக்கு மேம்பட்ட பிசாசுகள்.

அது என்ன? பழைய ரோம சாம் ராஜ்யம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, யூதர் கள் துன்புறுத்தப்படுதல்.

அவை ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டு காலமாக ஐபிராத்து நதியண்டை யில் கட்டப்பட்டிருந்தன, அவைகளால் வாக்குத்தத்தத்துக்கு கடந்து செல்ல முடியவில்லை. அது மற்றப் பக்கத்துக்கு செல்ல முயன்று கொண்டிருந்த மதசம் பந்தமான ஒரு கூட்டம். ஐபிராத்து ஏதேன் வழியாக பாய்ந்து வருகிற தென்று உங்களுக்குத் தெரியும். அவை அங்கே கட்டப்பட்டிருந்தன - துன்புறுத்தும் 200,000 பிசாசுகள்.

128 **ஆறாம் எக்காளத்தின் கீழ் என்ன நடக்கிறதென்று பாருங்கள். அவை யூதர் களின் மேல் அவிழ்த்து விடப்பட்டன. யூதர் கள் துன்புறுத்தப்பட்டனர். இரண்டாயிரம் ஆண்டுகளாக கட்டப்பட்டிருந்த இயற்கைக்கு மேம்பட்ட பிசாசுகள், பிறகு ஸ்டாலின், ஹிட்லர் போன்றவர்களால் யூதர்களின் மேல் அவிழ்த்து விடப்பட்டன.**

129 நீங்கள், "அது ரோம மார்க்கம் அல்ல" எனலாம். பழைய அஞ்ஞான ரோமன் நாட்களில் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தின அதே ஆவி தான் இது. இப்பொழுது அது யூதர்களின் மேல் அவிழ்த்து விடப்பட்டது. (மாம்சத்துக்குரிய இஸ்ரவேலரையும் ஆவிக்குரிய சபையை யும் இப்பொழுது நாம் பிரிப்பதை கவனி யுங்கள்).

130 ஆறாம் முத்திரையின் கீழ் தேவ வசனத்தினிமித்தம் இரத்தசாட்சிகளாக மரித்த ஒவ்வொருவரும் சத்தமிட்டு அங்கிகள் பெற்றுக் கொண்டது ஞாபகமுள்ளதா? (ஐந்தாம் முத்திரையின் கீழ் - தமிழாக்கியோன்). அது கிருபையினால் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஏனெனில் புறஜாதிகளிலிருந்து மணவாட்டியை அழைக்கும் பொருட்டு, இவர்கள் சுவிசேஷத்தைக் காணக்கூடாதபடிக்கு குருடாக்கப்பட்டிருந்தனர். கிறிஸ்துவுக்கு முற்றிலும் விரோதமாயிருந்த அவர்களுக்கு முத்திரையின் கீழ் அங்கிகள் கொடுக்கப்பட்டதாக வேதம் கூறுகின்றது. அதற்கு காரணம் என்னவெனில், அவர்கள் குருடாக்கப்பட்டதாக வேதம் கூறுகின்றது. உங்கள் நிமித்தம் அவர்கள் குருடாக்கப்பட்டனர்! அவர்கள் அதைப் பெற்றுக் கொள்வார்கள் என்று

நீதியுள்ள தேவன் அறிவார். ஏனெனில் உங்கள் நிமித்தம் அவர்கள் குருடாக்கப்பட்டனர். வேதம் அவ்வாறு கூறுகின்றது.



# கவனியுங்கள், 200,000 பிசாசுகள் யூதர்கள் மேல் அவிழ்த்து விடப்பட்டன



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-07-19M எக்காளப் பண்டிகை

136. இரண்டாயிரம் ஆண்டுகளாக, இந்த ஆவி ரோம மக்களின் மூலம், ரோம சபையின் மூலம் அசையமுடியவில்லை. ஆனால் அதே ஆவி முதலில் ரோமாபுரி யிலிருந்த சர்வாதிகாரி முசோலினியின் மேல் வந்து....

137. நடக்கப் போகும் ஏழு சம்பவங் களைக் குறித்து அவர் 1933ல் எனக்குக் காண்பித்தது உங்களுக்குத் தெரியுமல் லவா? அவைகளில் ஐந்து ஏற்கனவே நிகழ்ந்து விட்டன. டாக்டர் லீ வேயில் அதைக் குறித்து ஒரு புத்தகம் எழுதிக்

கொண்டிருக்கிறார். பாருங்கள்? ஐந்து சம்பவங்கள் பிழையின்றி நிகழ்ந்து விட்டன. இன்னும் இரண்டு சம்பவங்களே நிகழ வேண்டும். அவருடைய வருகைக்கு முன்பு இவை நிகழுமென்று அவர் கூறி னார். இதோ நாம் முடிவு காலத்தில் இருக் கிறோம். ஆறாம் சம்பவம் நிகழவேண்டிய நேரம் வந்து விட்டது போல் தோன்றுகிறது. பாருங்கள்? பிழையின்றி அப்படியே. யுத்தங்கள் போன்றவை கூட, அது எப்படி நடக்குமென்று. அது ஒரு அணுவும் பிசகாமல் அப்படிமே நடந்தது. ஒரு முறை கூட அது தவறவில்லை.

138. ஜனங்களே, கவனியுங்கள், நாம் ஒவ்வொரு மணி நேரமும் கணக்கு எடுத்துப் பார்க்க வேண்டியதாயுள்ளது.

நாம் எங்குள்ளோம் என்று நமக்குத் தெரியாது-மிக அருகாமையில்! - அவை அவிழ்த்து விடப்படுகின்றன... ஆறாம் முத்திரையின் கீழ் இந்த 200,000 பிசாசின் ஆவிகளும் ரோமாபுரி, ஜெர்மனியில் தொடங்கி - ஹிட்லர். கவனியுங்கள், அவர்கள் ராஜாக்களைப் போல் அதிகாரம் பெற்றிருந்தனர். ஆனால் முடிசூடப்படவில்லை என்று வேதம் கூறுகின்றது. சர்வாதிகாரி முடிசூடப்பட்ட ராஜாவல்ல, அவன் ராஜாவைப் போல் அதிகாரம் பெறுகிறான்.

139. ஓ, ஒன்றைக் கூற தேவனுடைய ஆவி என்னில் அசைவாடுகிறது (உங்களுக்குத் தெரியுமா?) அதை எப்படி கூறுவதென்றோ, என்ன கூறுவதென்றோ

எனக்குத் தெரியவில்லை. அதை கூறாமல் விட்டு விடுவது நல்லது.

140. **கவனியுங்கள், 200,000 பிசாசுகள் யூதர்கள் மேல் அவிழ்த்து விடப்பட்டன.**

**அவர்கள் அவர்களை சுட்டெரித்தனர், தொழுமரத்தில் தூக்கி கொலை செய்தனர்.**

**அவர்களுடைய இரத்தக்குழாய்களில் வாயுவைப் பாய்ச்சினர். அவர்களைக் கொல் வதற்கு வாய்வு இல்லாதவரைக்கும் அவ்வாறு செய்தனர்.**

**தோட்டாக்கள் தீரும் வரைக்கும் அவர் களைச் சுட்டுக் கொலை செய்தனர்.**

**அவர்களால் முடிந்த அனைத்தும் செய் தனர்.**

அவர்களுடைய உடல்களை சுட்டெரித்தனர், அவைகளை வேலிகளில் தொங்க விட்டனர் - பிள்ளைகளையும் குற்றமற்றவர்களையும். அவர்கள் யூதர்கள் என்னும் காரணத்தால் கொலை செய்யப்பட்டனர்.

ஆனால் அவர்கள் தகுதியற்றவர்களாயிருந்த போதிலும், அவருடைய கிருபையின் நிமித்தம் ஒவ்வொருவருக்கும் ஒரு அங்கியைத் தருவதாக தேவன் வாக்களித்துள்ளார்.

நாம் காணவேண்டுமென்பதற்காக அவர்கள் குருடாக்கப்பட்டனர்.









# ஓ, ஜனங்களே, நீங்கள் தூக்கத்தை விட்டு விழித்துக்கொண்டு, தேவனிடம் திரும்புங்கள்





சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 61-02-17 மிருகத்தின் முத்திரையும் தேவனுடைய முத்திரையும் #2

53. இப்பொழுது, முதலாம் உலகப் போர், இரண்டாம் உலகப்போர், இப்பொழுது நாம் மூன்றாவது உலகப்போருக்கு ஆயத்தமாகிறோம்: எல்லா இடங்களிலும் அப்படிப்பட்ட சூழ்நிலையே உண்டாகிக் கொண்டிருக்கிறது.

அது என்ன? இஸ்ரவேல் தன்னுடைய தாய்நாட்டில் இருந்து அவளுடைய மேசியாவுக்காக காத்துக் கொண்டிருக்கிறாள்.

புறஜாதி சபை, பெந்தெகோஸ்தே காலம், லூத்தர், வெஸ்லி, மேலும் இப்பொ

ழுது பெந்தெகோஸ்தே காலமானது வெது வெதுப்பாக ஆகி, இயேசுவை வாந்திப் பண்ணிப் போட்டு விட்டது, அவர் அவைகளை வாந்திப் பண்ணிப் போட்டுக் கொண்டிருக்கிறார்: சரியாக, பெந்தெ கோஸ்தே காலம்.

ஆனால் உலகமானது அழிக்கப்படுவ தற்கு முன்பு, சரியாக முடிவில், இயேசு, ”சோதோமின் நாட்களில் நடந்ததுபோல, மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக் கும்,” புறஜாதி சபையானது அதே வல்ல மையையும், அதே தூதனையும், அதே சாட்சியையும் பெற்றுக்கொள்ளும்... நீங்கள் நிச்சயமாகவே அதைக் காண முடியும். அது அப்படியே எவ்வளவு தெளிவாக இருக்க முடியுமோ அவ்வளவு

தெளிவாக இருக்கிறது. ஒரு சிறு பிள்ளையும் அதைக் காண முடியும். புரிகிறதா?

54. காரியங்கள் அவ்விதமாகத்தான் இருக்கிறது; நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம். எல்லாமே அதை அறிவிக்கின்றன. நீங்கள் வேதாகமத்தில் எங்கு போக விரும்பினாலும், அது சரியாக இங்கேயே இருக்கிறது, இதோ பாருங்கள்; உலகமானது பதட்டத்தோடு பயந்து நடுங்கிக் கொண்டிருக்கிறது, என்ன விஷயம்? எல்லாமே அவ்விதம் உள்ளது. தேசங்கள் நடுங்கிக் கொண்டிருக்கின்றன.

*நாடுகள் நடுங்கிக் கொண்டிருக்கின்றன,*

*இஸ்ரவேல் விழித்தெழும்புகின்றது,*

*வேதாகமம் முன்னுரைத்த அடையாளங்கள் இவை;*

*புறஜாதிகளின் நாட்கள் எண்ணப்பட்டுள்ளன,*

*திகில்கள் அங்கு நிறைந்துள்ளது (encumbered);*

*ஓ சிதறப்பட்டோரே, உங்கள் சொந்தத்துக்கு திரும்புங்கள்.* (அது சரியே.)

*மீட்பின் நாள் சமீபமாயுள்ளது,*

*மனிதரின் இருதயங்கள் பயத்தினால் செயலற்று நின்று போகின்றன;* (அது சரிதானே, இல்லையா?)

*ஆவியில் நிறைந்து,*

*உங்கள் தீவட்டிகளின் திரியை வெட்டி கத்தரித்து, சுத்தப்படுத்தி,*

*நிமிர்ந்து பாருங்கள்! உங்கள் மீட்பு சமீபமாயுள்ளது.*

*கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்யுரைக்கின் றனர்,*

*கிறிஸ்துவாகிய இயேசு நமது தேவன் என்னும் தேவனுடைய சத்தியத்தை அவர் கள் மறுதலிக்கின்றனர்.*

ஓ, எப்படியும் இந்த உலகத்திற்கு என்னத்தான் ஆனது? என்ன தவறு நேர்ந்தது?

ஓ, ஜனங்களே, நீங்கள் தூக்கத்தை விட்டு விழித்துக்கொண்டு, தேவனிடம் திரும்புங்கள்.

உங்களுக்கு என்ன ஆனது? தேவனுடைய மகத்தான அசைவை உங்களால் காண முடியவில்லையா, அவருடைய தூதனானவர் இறங்கி வந்து, அசைவாடி, அதே அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்து கொண்டிருந்து, தாம் என்ன செய்வார் என்று கூறினாரோ அதை இரவு நேரங்களில் சரியாக உங்களுக்கு முன்பு அவ்வாறே சரியாகச் செய்து கொண்டு வருகிறதை உங்களால் காண முடியவில்லையா?





எகிப்தில் யோசேப்பை அறியாத பார்வோன் தோன்றினான். அவ்வாறே ஜெர்மனியில் ஹிட்லரும், ருஷியாவில் ஸ்டாலினும், இத்தாலி நாட்டில் முசோலினியும் தோன்றினர். இவர்கள் எல்லோரும் யூதர்களை வெறுத்தனர். அவர்கள் தங்களுடைய சொந்த தேசத்திற்கு திரும்ப வேண்டும் என்பதற்காகவே இவர்கள் எழுப்பப்பட்டனர்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

41. பரம பிதாவே, விசுவாசத்தின் மூலம் நாங்கள் எதிர்காலத்தை நோக்குகி றோம். ஆண்டவரே, உம்முடைய மக்களை ஒன்று சேர்க்கும் ஏதோ ஒன்று பூமியின் மீது வருவதை நான் விசுவாசத்தால் காண்கி றேன். ஸ்தாபன சபைகளில் ஒன்றுக் கொன்று வித்தியாச பேதங்கள் அதிகம் காணும்போது, அது ஜனங்களை புறம்பாக் குவதாய் அமைந்துள்ளது.

42. **எகிப்தில் யோசேப்பை அறியாத பார்வோன் தோன்றினான்.**

அவ்வாறே ஜெர்மனியில் ஹிட்லரும், ருஷியாவில் ஸ்டாலினும், இத்தாலி நாட்டில் முசோலினியும் தோன்றினர்.

இவர்கள் எல்லோரும் யூதர்களை வெறுத் தனர்.

அவர்கள் தங்களுடைய சொந்த தேசத் திற்கு திரும்ப வேண்டும் என்பதற்காகவே இவர்கள் எழுப்பப்பட்டனர்.

43. தேவனே, நீர் கையாளும் முறைகள் எங்களுக்குப் புரிவது கிடையாது.

நீர் தான் யூதர்களின் மேல் அழுத் தத்தைக் கொண்டு வந்தீர்.

யூதர்களுக்கு ஜெர்மனியில் தங்குவதற்கு வீடுகளில்லாமற் போயின.

**அவர்களிடமிருந்து எல்லாம் பறிக்கப் பட்டது.**

**அவ்வாறே இத்தாலியிலும் ருஷியாவிலும் அவர்கள் போவதற்கு இடமில்லை.**

**வார்த்தை நிறைவேறவேண்டும் என்பதற் காகவே அவர்கள் தங்கள் சொந்த தேசத் திற்கு விரட்டியடிக்கப்பட்டனர்.**


44. **ஓ, ஜனங்கள் துன்புறுவதைக் காணும்போது, தேவனுடைய அன்புள்ள கரங்கள் கொடூரமாகத் தென்படுகின்றன. ஆயினும், தமது சிறு பிள்ளைகளை வழி நடத்தும் யேகோவாவின் மிருதுவான கரங்க ளாகவே அவை இப்பொழுதும் அமைந்துள் ளன.** ஆண்டவரே, உமக்கு நன்றி செலுத் துகிறோம்.

45. ஆண்டவரே, ஸ்தாபனங்கள் இப்பொழுது விசுவாசிகளை வற்புறுத்தி, அவர்களை சபை பிரஷ்டம் செய்து, அவர்களுடைய பெயர்கள் தங்கள் புஸ்தகங்களில் எழுதப்பட வேண்டுமென்றும், இல்லையேல் அவர்கள் இரட்சிப்படைய முடியாதென்றும் கூறி மற்ற குழுவுடன் எவ்வித தொடர்பும் கொள்ளக்கூடாது என்று கட்டாயப்படுத்தும் நாட்களை நான் காணும்போது, யேகோவாவின் மென்மையான கரங்கள் அவர்களை ஜீவ விருட்சத்திற்கு வழிநடத்துவதை நான் உணருகிறேன்.

46. தேவனே, அவர்கள் ஒவ்வொருவரும் .... அவர்கள் நிச்சயமாக ஜீவ விருட்சத்திற்கு வழிநடத்தப்படுவார்கள்

என்று எனக்குத் தெரியும். ஏனெனில் அது உமது வார்த்தை. அது ஒருபோதும் தவறுவதில்லை. நாங்களும் ஜீவவிருட்சத் திற்கு வழி நடத்தப்பட்டு, நித்திய ஜீவ னைச் சுதந்தரித்துக் கொள்ளவும், தேவ னுடைய கரத்தை நாங்கள் கண்டு கொண்டு, இப்பொழுது நாங்கள் நடந்து கொண்டிருக்கும் நிழல்களுக்கு அப்பா லுள்ள வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை எங்கள் விசுவாசக் கண்களால் காண கிருபையருளும்.





ஆகவே, எந்த நேரத்திலும் தேவன், “இஸ்ரவேல் என் ஜனங்களாயிருக்கிறார்கள்” என்று கூற முடியும். அவ்வாறு ஆகும் பொழுது புறஜாதிகளின் காலம் முடிவடைந்து விடும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 61-07-30M தானியேலுக்கு காபிரியேல் அறிவுறுத்தியவைகள் #1

138. கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளாக யூதர்கள் தங்களுடைய சுயதேசத்திற்கு வெளியே பூமியின் நான்கு திசைகளிலும் சிதறடிக்கப்பட்டவர்களாய் இருந்தனர். விபரமாகப் பார்க்க வேண்டு மென்பதற்காக நாம் எவ்வாறு இந்தச் செய்தியை வாரக்கணக்கில் நீடித்துக் கொண்டு செல்ல முடியும்! மேசியாவைப் புறக்கணித்த பொழுது ரோம சாம்ராஜ் யத்தால் எப்பொழுது இஸ்ரவேலர் சிதறடிக் கப்பட்டனர் என்பதை அவர்களுடைய வரலாற்றை திருப்பிப் பார்த்து நாம் கண்டு கொள்ளமுடியும். எவ்வாறு அவர்கள் வானத்தின் கீழே சகல ஜாதிகளுக்குள்ளும்

துரத்தப்பட்டார்கள் என்பதையும் நாம் காணலாம். யாக்கோபு - இஸ்ரவேல் எவ்வாறு கோத்திரப் பிதாக்களை ஆசீர்வதித்தான் என்பதையும் கடைசி நாட்களிலே அவர்கள் அங்கே இருப்பார்கள் என்பதையும் குறித்து ஆதியாகமம் 44:45 அதிகாரங்களிலே திருப்பிப் பார்த்து, அங்கே அதைக் குறித்து காண்பிக்க முடியும். இஸ்ரவேலின் கோத்திரங்கள் ஒவ்வொன்றும் எந்தெந்த தேசத்தில் சிதறிப் போயிருப்பார்கள் என்பதைப் பற்றி முன்னுரைக்கப்பட்டதே அதைப் பற்றி சரியாக நான் உங்களுக்கு சுட்டிக்காட்ட முடியும். இன்று நாம் இங்கே இருக்கிறாம்.

139. நாம் அறிந்திருக்கிற இந்த யூதன் உண்மையான யூதனல்ல. உண்மையான யூதன் என்னப்பட்டவன், உண்மையான வைதீகமான மார்க்க நெறி பிறழாதவன்

ஆவான். அவன் தன்னை உலகத்தின் காரியங்களால் அசுசிப்படுத்திக் கொள்ளா தவனும், புறப்பட்டுப்போய் மற்ற சபை களைச் சாராதவனாகவும் இருப்பான். அப்படிப்பட்டவர்கள் தான் அங்கே திரும்பிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பாலாடைக்கட்டி (Cheese), ரொட்டி ஆகியவைகளைப் புசித்து, மலைப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர், பழைய நகரத்தினுள் பிரவேசிக்க அனு மதிக்கப்படவில்லை. இருமருங்கிலும் இயந்திரத் துப்பாக்கிகள் பயமுறுத்திக் கொண்டிருக்கும், ஆளில்லாத பிரதேசத்தில் இப்பக்கமாக அவர்களுக்கு ஒரு நகரம் கட்ட வேண்டியதாயிருக்கிறது. ஆனால் அவள் துளிர்விட ஆரம்பித்து விட்டாள். ஆமென், ஆமென்! நேரமானது நெருங்கி விட்டது.

140. அங்கே இஸ்மவேலும், ஈசாக்கும் இன்னமும் தேசத்தைக் குறித்து தகராறு பண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அத்தேசமோ இஸ்ரவேலுக்கு சொந்த மானது. நீங்கள் அந்த புதிய எருச லேமுக்குப் போக நேர்ந்தால், அவர்கள் உங்களை பழைய எருசலேமுக்கு வருவ தற்கு விடமாட்டார்கள். நீங்கள் முதலில் அங்கேதான் போக வேண்டும், இஸ்ம வேலின் புத்திரராகிய அவ்வரேபியர்கள் உங்களுக்கு எல்லாவற்றையும் விளக்கிக் கூறவிடவேண்டும், அப்பொழுது அவர்கள் உங்களை அந்த மறுபக்கத்திற்குள் இட்டுச் செல்வார்கள். ஆனால் பொறுத்துக்கொள் ளுங்கள்; தேவனுடைய பிள்ளைகள் அந் நகரத்தை முழுவதும் எடுத்துக்கொள்ளும் வேளையானது வருகிறது. அப்படித் தான் நடக்கப்போகிறது. எருசலேமானது திரும்

பக் கட்டப்படும். அன்றாடக பலி செலுத்துதல் ஏற்படுத்தப்படும். அந்த கடைசி ஏழு வாரங்களுக்கென அவர்களோடு அந்திக் கிறிஸ்து உடன்படிக்கை செய்வான். அவ்வாரத்தின் மத்தியில் அவன் உடன் படிக்கையை முறித்துப் போடுவான். கத் தோலிக்கக் கொள்கைக்கு அவர்களைத் திருப்புவான். அருவருப்பு சகலத்தின் மேலும் அவ்விதமாக வந்து பரவுதல். அதன் பின்பு முடிவானது வரும். கவனி யுங்கள்.

141. கவனியுங்கள், "எழுபது வாரங் கள்", ஆம், ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகள் அவர்கள் தூரமாய் இருந்து வந்தார்கள். இப்பொழுது அவர்கள் துரத்தி விடப்பட்டிருக்கிறார்கள், அவர்களுடைய ஜனங்கள்; பார்வோனின் இருதயத்தை கடினப்படுத்தியது போன்று, அவர்

ஹிட்லரின் இருதயத்தையும் கடினப்படுத்த வேண்டியிருந்தது. அவர்களில் பத்து இலட்சக்கணக்கானவர்கள் மரணமடைந்தனர். மனுஷ ஆத்துமாக்களாகிய குழந்தைகள் சிறுவர்கள், பெரியவர்கள் உள்ளிட்ட 6 மில்லியன் யூதர்களை கொன்று குவித்த இந்த ஐக்மேன் என்ற குற்றவாளியைப் பாருங்கள். ஐக்மேன் என்ற ஒரு மனிதன்.

142. ருஷியாவைப் பாருங்கள், நீங்கள் அவர்களை அங்கிருந்து துரத்திவிட்டீர்கள். அவர்கள் அவர்களை எவ்விடங்களிலும் துரத்திவிட்டனர். அவர்கள் அவர்களுடைய பண ஆசையினிமித்தமாக அசட்டை பண்ணப்பட்ட ஜனமாக இருந்தனர். அவர்கள் மீண்டும் திரும்பி வந்தனர். ஆனால் அந்த சிறுபான்மையினரான அவர்கள் பாலஸ்தீனத்திற்குத் திரும்பிக்

கொண்டிருக்கின்றனர். ஆமென், சகோதரர்களே.

143. அவள் தன் சுயதேசத்திற்குத் திரும்பி வரத் துவங்குவதை நீங்கள் காண்கையில்... 1,44,000 பேர்கள் என்ற எண்ணிக்கை கிடைப்பதற்குப் போதுமான ஜனங்கள் அங்கே வந்து விட்டார்கள். என்ன சம்பவித்துக்கொண்டிருக்கிறது? அவர்கள் தங்கள் யோசேப்பை அறிந்து கொள்ளுவார்கள். நீங்கள் கவலைப்பட வேண்டாம். ஆம் ஐயா! அது சம்பவிப்பதற்காக அவர்கள் யாவரும் அங்கே காத்துக்கொண்டிருக்கின்றனர். அதற்குரிய சரியான அந்த வேளையானது...

144. **கடந்த ஆண்டில் தேசங்கள் அவர்களை ஒரு தேசமாக அங்கீகரித்து பிரகடனம் செய்துவிட்டனர். அது நடக்கும்போது, நாம்**

**முடிவுக்கு சமீபமாக இருக்கிறோம். புறஜாதி சபையானது போய்விட்டிருக்கும். ஆகவே, எந்த நேரத்திலும் தேவன், "இஸ்ரவேல் என் ஜனங்களாயிருக்கிறார்கள்" என்று கூற முடியும். அவ்வாறு ஆகும் பொழுது புறஜாதி களின் காலம் முடிவடைந்து விடும்.**

145. மத்தேயு 24ல் "அவர்கள் மிதிப் பார்கள்" என்று இயேசு கூறினார். (பாழாக் கும் அருவருப்பு). "புறஜாதிகளின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புற ஜாதியாரால் மிதிக்கப்படும்" (லூக்.21:24). அது முடிவடையும் பொழுது, யூதர்கள் எருசலேமுக்குள் திரும்பி வந்து, ஆல யத்தையும் ஆலய வழிபாட்டையும் திரும்ப ஏற்படுத்துவார்கள்.



# நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 61-08-06 தானியேலின் எழுபது வாரங்கள் #3

149. இப்பொழுது, முதலாம் உலகப் போரின் காலத்திற்குப் பிறகு, நாற்பதாண் டுக் காலமாக யூதர்கள் தங்களுடைய சுயதேசத்திற்கு திரும்பி வந்து கொண் டேயிருக்கின்றனர். இஸ்ரவேலானது தன் சுய தேசத்திலிருக்காத வரையிலும், அவர்க ளோடு தேவன் இடைபடுவதேயில்லை.

150. மற்ற தேசங்களிலிருந்த அந்த யூதர்கள் தங்களுடைய நாட்டிற்கு திரும்பி போய்க் கொண்டிருக்கையில் அதைக் குறித்து 'லுக்' என்ற பத்திரிக்கையில் ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது. உங்களுக்கு நினைவிருக்கும். யூதர்கள் ஈரானில் இருக்

கையில், அவர்களை ஏற்றிக்கொண்டு வருவதற்காக விமானங்கள் அங்கே தரையிறங்கியிருக்கையில் நடந்ததைப் பற்றி மார்க்க சம்மந்தமானதொரு பத்திரிக்கையில் நான் வாசித்தேன். அவர்களெல்லாம் எங்கெங்கோ இருந்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. அவர்கள் சிதறிப் போயிருந்தார்கள். அவர்கள் உண்மையான யூதர்கள். அவர்களுக்கு ஒரு தருணம் கிடைக்கவில்லை. இப்பொழுது சகோதரனே, அங்கே தான் அந்த 1,44,000 பேர்கள் இருக்கிறார்கள். நாம் வெளிப்படுத்தின விசேஷம் 11-ம் அதிகாரத்தை எடுத்துக்கொள்ளும் போது, அதைக் குறித்து நீங்கள் காண்பீர்கள். காத் கோத்திரத்தில் பன்னீராயிரம், ஆசேர் கோத்திரத்தில் பன்னீராயிரம், ரூபன் கோத்திரத்தில் பன்னீராயிரம் பேர்கள்...” என்று அவர்

கூறினார். அவர்கள் யாவரும் எங்கே நின்றுகொண்டிருந்தார்கள்? சீனாய் மலையில் மேல்தான். யூதர்கள் தங்கள் சுய தேசத்திற்கு திரும்பி விட்டார்கள். அவர்கள் அங்கே இருந்தனர், வால் ஸ்ட்ரீட்டில் உள்ள நேர்மையற்ற அந்த யூதர் கூட்டமல்ல அவர்கள்; இல்லை ஐயா, அது உண்மையான யூதர்களாகும்.

151. அந்தப் பத்திரிக்கையிலே, அங்கேயுள்ள யூதர்களைக் கொண்டு வருவதற்காக விமானங்கள் வந்திறங்கிய போது, நடந்ததைப் பற்றி கட்டுரை வெளியாகியிருந்தது. அவர்கள் விமானத்தில் அருகில் கூட போகவில்லை. அவர்களுடைய வயது முதிர்ந்த யூத ரபீ அங்கே நின்றுகொண்டு, “நமது தீர்க்கதரிசி, நாம் நமது சுயதேசத்திற்கு போகப் போகையில், நாம் கழுகுகளின் செட்டைகளின் மேல் சுமந்து

சென்று கொண்டு போகப்படுவோம் என்று கூறியதை நினைவில் கொள்ளுங்கள்" என்று கூறினார். அவர்கள் இன்னமும் மரக்கலப்பையால் தான் உழுது கொண் டிருந்தார்களாம்.

*தேசங்கள் உடைகின்றன,*

*இஸ்ரவேல் விழித்தெழும்புகிறது.*

*தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தவை யாவும்*

*.....*

அவர்களுக்கென்று மீதமுள்ள எழுப தாவது வாரத்தைப் பற்றி பார்க்க நாம் நெருங்கிக்கொண்டிருக்கிறோம்.

152. சகோதரன் பெத்ரூஸ் அவர்கள் அவர்களுக்கு அச்சிறிய புதிய ஏற்பாட்டுப் புஸ்தகங்களை அனுப்புகையில் நான் அங்கே நின்று கொண்டிருந்ததை எண்ணிப் பார்க்கிறேன். அவர்கள் அதைப் படித்து விட்டு, “இவர்தான் மேசியா என்றால், அவர் செத்தவராக அல்ல, ஜீவிக்கிறவராக இருக்கிறாரெனில், அவர் தீர்க்கதரிசிக்குரிய அடையாளத்தை செய்து காண்பிக்கட்டும், அதை நாங்கள் காண்போமாக” என்றார் களாம். 'அவர் உயிரோடெழுந்தாரென் றால், தமது சபையில் ஜீவிக்கிறாரெனில், அவர் தீர்க்கதரிசிக்குரிய அடையாளத்தை செய்கிறதை நாங்கள் காணட்டும். அப் போது நாங்கள் அவரை விசுவாசிப்போம்” என்றார்களாம். யூதர்கள் எப்பொழுதும் அதை விசுவாசிக் கிறார்கள். அவர்கள்

மேசியாவை ஒரு தீர்க்கதரிசி என்று அறிந்திருக்கிறார்கள்.

153. அந்நாளிலே, நான் சகோதரன் ஆர்கன்ப்ரைட்டின் இடத்தில் அங்கே அந்த யூதர்களோடு நின்றிருந்தபொழுது, “எங்க ளிடத்திற்கு எங்கள் ஜனங்களண்டையிலே வாருங்கள்” என்றார்கள்.

154. நான், 'நிச்சயமாக, நான் வருவ தற்கு மிக்க மகிழச்சியடைவேன்” என் றேன். மிக்க அவசரமாக ஒரு முடிவை நான் எடுத்துவிட்டேன். எகிப்திலுள்ள கெய்ரோவுக்கு நான் புறப்பட்டேன். (ஒலிநாடாவில் முதல் பக்கம் முற்றுப் பெறாமல் முடிகிறது - ஆசி).

155.... ஆயிரக்கணக்கான அத்தலை வர்கள். “அவர்களை எங்காவது ஒரு

சமவெளிப் பகுதியில் கொண்டு வாருங் கள். அவர் இன்னமும் ஒரு தீர்க்கதரிசியாக இருக்கிறாரா இல்லையா என்பதை நாம் கண்டுபிடித்துவிடுவோம். (ஆமென்!) நல்லது, அவர் என்ன செய்கிறார் என்பதை காண்போமாக" என்றார்கள். ஓ, அது அவர் களுக்கு மிக அருகாமையில் இருந்தது. அதைத் தான் அவர்கள் விரும்பினார்கள். அவர்கள் மாத்திரம் அதைக் கண்டுக் கொள்ளுவார்களானால், அதை விசுவாசிப் பார்கள்.

156. ஆகவே நான் என்ன செய்தேன்? நான் கெய்ரோவில் இறங்கி, அங்கிருந்து அங்கே போவதற்காக புறப்பட்டேன். அதற்கான டிக்கெட் ஏற்கெனவே என்னி டம் இருந்தது. பிரயாணிகளை விமானத் தில் ஏறிக்கொள்ளும்படியான அழைப்பு கொடுப்பது முடிவதற்கு இன்னும் இருபது

நிமிடங்கள் தான் மீதமிருந்தன. அப்பொழுது, ஏதோ ஒன்று என்னிடம், “இப்பொழுது அல்ல, புறஜாதிகளின் அக்கிரமத்தின் பாத்திரம் இன்னமும் நிறைவாகவில்லை. எமோரியரின் அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை. அதைவிட்டு நீங்கியிரு” என்று கூறியது. நானாக அதைக் கற்பனை செய்தேனோ என்று எண்ணினேன். ஆகவே நான் விமானங்கள் நிறுத்தி வைக்கப்படும் ஷெட்டின் பின்னால் போய் நின்று கொண்டு ஜெபித்தேன். “இப்பொழுது அங்கே போக வேண்டாம், அதைவிட்டு நீங்கியிரு” என்று என்னிடம் கூறப்பட்டது. பிறகு நான் வேறு இடத்திற்குப் போவதற்காக டிக்கெட் எடுத்துக்கொண்டு அங்கே போகாமல், வேறே இடத்திற்கு நான் புறப்பட்டுப் போய் விட்டேன்.

ஏனெனில் அதற்கான வேளையானது இன்னும் வரவில்லை.

157. இப்பொழுது, தேவன், எந்த நேரத்தில் யூதர்களோடு மீண்டும் இடைப்பட அனுமதிக்கப் போகிறார் என்பதை பற்றி என்னால் உங்களுக்கு கூற முடியாது. எனக்குத் தெரியாது. எவருக்கும் தெரியாது. ஆனால் செவி கொடுத்துக் கேளுங்கள், இஸ்ரவேல் ஏற்கெனவே தனது சுய தேசத்தில் இருக்கிறதென்றால், ஏற்கெனவே அது.... அங்கே பாறைகளெல்லாம் பொறுக்கியெடுக்கப்பட்டு, நீர்ப்பாசனத்திற்கான தண்ணீர்களெல்லாம், அதாவது தேவன் அவர்களுக்கு வாக்குரைத்தபடியெல்லாம், கிணறுகளையும், பெரிய திறந்த ஊற்றுகளையும் அவர்கள் கண்டு கொண்டு விட்டனர். நீங்கள் அது போன்ற மிக

அழகான பிரதேசத்தை வேறு எங்கும் கண்டிருக்கவே முடியாது. அவர்கள் ஒரு நகரத்தை கட்டியெழுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு நீர்பாசன வசதியுள்ளது. உலகிலேயே மிகச் சிறந்த நிலத்தை அவர்கள் உடையவர்களாயிருக்கின்றனர். உலகையே விலைக்கு வாங்கக் கூடிய அளவுக்கு விலைமதிப்புயர்ந்த இரசாயனங்கள் அவர்களிடம் உள்ள சவக் கடலில் உள்ளது என்று நாம் காண்கிறோம்.

158. **அவர்களுடையவை யாவும் அவர்களுடைய கரங்களில் கிட்டியிருக்கிறது. அதை அவர்கள் எவ்வாறு செய்தார்கள்? ஹிட்லரின் இருதயம் கடினப்படுத்தப்பட்டது; முஸோலினியின் இருதயம் கடினப்படுத்தப்பட்டது. பார்வோனின் இருதயம் கடினப்படுத்தப்பட்டு, அதனால் அவர்களை அது அவர்களுடைய**

**தேசத்திற்கு எவ்வாறு துரத்தியதோ, அதைப் போலவே நடந்துள்ளது. கடந்த நாற்பதாண் டுக் காலமாக அவர்கள் அந்த தேசத்தினுள் வந்துகொண்டேயிருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் அங்கேயிருந்து கொண்டு காத்துக் கொண்டிருக்கிறார்கள்.**

159. புறஜாதி சபையானது லவோதிக் கேயா சபையின் காலத்தின் முடிவிலே வந்துள்ளது. யூதர்கள் தங்களுடைய சுய தேசத்திற்கு ஏற்கனவே வந்துவிட்டார் களென்றால், அப்பொழுது, ஏற்கனவே புறஜாதிகளின் விசுவாச துரோகமானது வந்துவிட்டது என்று அர்த்தம். நமக்கு உடைந்து போயிருக்கிற தேசமும் நமக்கு உண்டாயிருக்கிறது, தலைக்கு மேலே அணுகுண்டுகள் தொங்கிக்கொண்டிருக் கின்றன; வெதுவெதுப்பாயுள்ள சபையும்

நமக்கு உண்டாயிருக்கிறது, தங்களை வேறு பிரித்துக்கொண்டுள்ள சபையும் நமக்கு உண்டாயிருக்கிறது, தலைக்கல் லாகிய அவர் வரும்போது அவரோடு சேர்ந்து கொள்ள தகுதியடையும்படி செய்ய, இயேசு கிறிஸ்துவின் ஊழியத் தைப் போன்றே உள்ளதான ஒரு ஊழிய மும் நமக்கு உண்டாயிருக்கிறது, இவ்வள வுக்குப் பின்னும் இன்னும் வேறு என்ன சம்பவிக்க வேண்டியதிருக்கிறது? அது எந்த நிமிடத்திலும் சம்பவிக்கக் கூடும், இனி வேறு ஒன்றும் இல்லை. நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம். ஓ, மகிமை!



# அவர்களை சுட்டெரித்த அந்த இடத்தில் நான் நின்றேன். ஹிட்லரும் மற்றோரும் அவர்களைக் கொன்ற இடத்தில்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 61-01-01 வெளிப்படுத்தின விசேஷம் 4 அதிகாரம் #2

140. ரோம சாம்ராஜ்யம் அவர்களை சிதறடித்தபொழுது, ஏனையோர்கள் அவர் களை சிதறடித்தபொழுது, ஹிட்லரால் அவர்கள் வெறுக்கப்பட்டபொழுது, பத்தா யிரம் ஆயிரமான அவர்கள் இரத்த நாளங் கள் வெடித்து, இரத்தம் கொப்புளிக்க அவர்கள் மரித்தனர், அவர்களது சரீரங்கள் வேலிகளில் தங்கள் குழந்தைகளோடு தொங்கிக்கொண்டு இருந்தன.

எலும்புகளும்... அவைகளை எடுத்து, எலும்புகளிலிருந்து உரம் செய்தார்கள்.

அவர்களுக்கு ஒரு ஊசியைப் போட்டு, வண்டிகளில் அவர்களைப் போட்டு விட்டார்கள். பிறகு அவர்கள் வெளியேறி, அவர்கள் மரிப்பதற்கு கொஞ்சம் நேரம் இருக்கையில், அவர்கள் "மேசியா வருவார், நாங்கள் மீண்டும் திராட்சை இரசம் குடிப்போம்'' என்று பாடினார்கள்.

அவர்கள் அவ்வாறு மரித்துக்கொண்டிருக்கையில், அந்த யூதர்கள், அங்கே சுற்றிலும் நடந்து, இன்னும் இருதயத் துடிப்புகளுக்குப் பிறகு, தங்கள் இருதயம் மாண்டு போகும் என்றறிந்தபோதும், அவர்கள் அங்கே, "நாங்கள் சீக்கிரம் மேசியாவைக் காண்போம்" என்று பாடிக்கொண்டேயிருந்தார்கள். ஓ, அவர்களுடைய எலும்புகளிலிருந்து உரம் செய்வித்தார்கள்.

141. இங்கிருக்கிற அநேக இராணுவ வீரர்கள் அதை அறிவீர்கள், அதைக் கண்டும் இருக்கிறீர்கள். அவர்களை சுட்டெரித்த அந்த இடத்தில் நான் நின்றேன். ஹிட்லரும் மற்றோரும் அவர்களைக் கொன்ற இடத்தில். ஸ்டாலின் ருஷியாவில் அதே காரியத்தைத் தான் செய்தான் என்பதைப் பாருங்கள். ஆனால் அந்த யூதன், அவனைப் பற்றி என்ன? அவன் தன் சுய தேசத்திற்கு திரும்பிப்போக அவனுக்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அங்கே தான் அவர்கள் நின்றுகொண்டிருக்கின்றனர்.

142. "நள்ளிரவுக்கு முன்பு மூன்று நிமிடங்கள்" என்ற அந்த பெரிய திரைப்படம் என்னிடம் உள்ளது. அந்த யூதர்கள் தேசத்தினுள் வந்தபோது, அவர்களிடம், "நீங்கள் ஏன் இங்கே திரும்பி வருகிறீர்கள்? உங்கள்

சுய தேசத்தில் மரிக்கவா?" என்ற கேள்வி கேட்கப்பட்டது.

143. "நாங்கள் மேசியாவைக் காணவே வந்திருக்கிறோம்" என்றார்கள். ஆமென். ஊ! நாம் முடிவுக்காலத்தில் உள்ளோம்.



வரிசைக்கிரமாக நிகழ
வேண்டியவைகளில் அடுத்தபடியாக
உள்ளதென்னவெனில், தேவனுடைய
இராஜ்யம் வருதல், கிறிஸ்துவின்
வருகையாகும்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: 61-08-06 தானியேலின் எழுபது வாரங்கள் #3

115. கவனியுங்கள்! யூதர்கள் தங்களுடைய சுயதேசத்தில் இருக்கிறார்கள், அங்கே அவர்கள் திரும்பிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். 'உலக யுத்தத்தின் மும்முரம் தளர்வுறுதல்' என்ற புத்தகத்தின் இரண்டாவது வால்யூமை நீங்கள் வாங்கிப் படித்தீர்களானால், அதில், முதலாம் உலகப் போரின் முடிவுக்குப் பிறகு, ஜெனரல் ஆலென்பி அவர்கள் எருசலேமுக்கு மேலாக விமானத்தில் பறந்து சென்று, அதைக் கைப்பற்றி, எருசலேமைப் பிடித்தார். அங்கே அந்த கிறிஸ்தவ மனிதர்கள் மரியாதை நிமித்தம் தங்கள் தொப்பிகளை கழற்றினவர்களாக எருசலேமுக்குள் அணி

வகுத்துச் சென்றார்கள். அங்கேயிருந்த துருக்கியப் படைகள் ஒரு துப்பாக்கி ரவையைக் கூட சுடாமல் தளபதி ஆலென்பி அவர்களிடம் சரணடைந்தனர். **அப்போதிலிருந்து தேவன் முசோலினியின் இருதயத்தையும், ஹிட்லரின் இருதயத்தையும், ஸ்டாலினுடைய இருதயத்தையும் கடினப்படுத்திக் கொண்டேயிருந்ததினால், அத்தேசங்களிலெல்லாம் மனிதர்கள் யூதர்களை பகைக்கத் துவங்கினர்.**

116. அதன்பிறகு, அம்மகத்தான பறவைகளாகிய ஈஸ்ட்டர்ன் ஏர்லைன்ஸ் விமானங்கள் அல்லது 'பான் அமெரிக்கன் ஏர்லைன்ஸ்' விமானங்கள் அவர்களை ஏற்றிக் கொண்டு அங்கே பறந்து சென்றன. அது டி.டபுள்யூ.ஏ என்ற விமானக் கம்பெனி என்று நம்புகிறேன். அதைப் பற்றி “லைஃப்' அல்லது 'லூக்'... அது

'லைஃப்' என்ற பத்திரிக்கை தான் என்று கருதுகிறேன். அதில் அதைப்பற்றி கடந்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக செய்தி வெளியிட்டிருந்தார்கள். கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக தங்கள் சுய தேசத்தை விட்டு சிதறிப் போயிருந்த யூதர்களை தேவன் திரும்ப கூட்டிச் சேர்த்துக்கொண்டேயிருக்கிறார், அந்த வேளையில் புறஜாதியார் தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டேயிருக்கிறார் கள். இப்பொழுது புறஜாதியார், வெளிப் படுத்தின விசேஷம் 3ம் அதிகாரத்தின்படி, கிறிஸ்துவை சபையை விட்டே வெளியே புறம்பாக்கிப் போட்டுவிட்டார்கள். அவரா லேயே தம் சபைக்குள் மறுபடியும் பிரவேசிக்க இயலவில்லை. அவருக்கு போவதற்கு எந்த ஸ்தலமும் இல்லை. அவர் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார். இது

எடுத்துக்கொள்ளப்படுதலுக்கான வேளை யாயிருக்கிறது.

117. மீட்கப்பட்டோர் யாவரும் இக் காலத்திலே... இங்கே... இந்த சிறு புள்ளி கள், உயிர்த்தெழுதலில் பரிசுத்தவான்கள் மேலே போவதைக் குறிக்கின்றன.... நாம் யாவரும் ஒன்று சேர்ந்து இங்கே சந்திக் கிறோம் என்பதை நீங்கள் இங்கே பாருங் கள். "கர்த்தருடைய வருகை மட்டும் உயி ரோடிருக்கும் நாம், நித்தியரையடைந்தவர் களுக்கு முந்திக் கொள்வதில்லை" என்று வேதம் கூறுகிறது. (1 தெச. 4:15). இங்கே, இந்த, இந்த, இந்த காலம் முதற்கொண்டு உள்ளவர்கள்.

118. இப்பொழுது, பெந்தெகொஸ்தே சகோதரரே! நீங்கள் எவ்வாறு இதை லவோதிக்கேயா சபைக்காலத்தோடு சம்மந்


தப்படுத்திப் பேச முடியும்? அவர்கள் இந்த ஒவ்வொரு காலங்கள் தோறும் நித்திரை செய்து காத்துக் கொண்டிருக்கிறவர்களாவர் உயிரோடிருக்கும் நாம் (இங்கேயிருக்கிற அந்த சிறிய மீதியாயிருக்கிற கூட்டத் தினர்), கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்தியடைந்த வர்களுக்கு முந்திக் கொள்வதில்லை. தேவ எக்காளம் முழங்கும், அப்போது மரித்த வர்கள் முதலாவது உயிரோடெழுந்திருப் பார்கள், பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங் கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் (எடுத்துக்கொள்ளப்பட்டு, (ஆமென்!) (நாம் இங்கே இந்த இடத்தில் தான் சந்திக்கிறோம்) இருப்போம்" (1தெச.4:15,16). நீங்கள் அங்கே இருக்கி றீர்கள். நாம் எங்கேயுள்ளோம்? சரியாக

இந்த இடத்தில். மேசியா எங்கே சங்கரிக்கப்பட்டார்? வேதவாக்கியம் கூறுகிற அதே இடத்தில் தான். எங்கே அந்த எழுபதாவது வாரமானது துவங்கும்? இந்த சபையானது முற்றாக துண்டிக்கப்பட்டதுமே சரியாக அந்த நேரத்தில்தான். பின்பு தேவன் யூதரிடம் திரும்பிச் செல்லுகிறார்.

119. சபையானது எடுக்கப்பட்டு போய் விட்ட பிறகு, யூதர்களின் வேளையானது வருகிறது என்பதை நீங்கள் நினைவில் கொண்டிருக்கவில்லையா? ஆனால் முதலாவதாக, அடுத்தபடியான நிகழ்வு வரிசைக்கிரமத்தில் என்னவெனில், புறஜாதியார் மத்தியில் ஒரு ஜாதியாராக ஒரு எழுப்புதல் உண்டாகி வல்லமையான ஜாதி உருவாவது கிடையாது. **வரிசைக்கிரமாக நிகழ வேண்டியவைகளில் அடுத்தபடியாக உள்ளதென்னவெனில், தேவனுடைய**

~ 8 ~

## இராஜ்யம் வருதல், கிறிஸ்துவின் வருகை யாகும்.



# அவர்கள் சிலுவையைப் புறக்கணித்து, அதற்கு பதிலாக இரட்டை சிலுவையை - ஸ்வஸ்திகாவை - ஏற்றுக்கொண்டனர்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-12-16 உலகம் விழுந்து போதல்

63. அண்மையில் ஜெர்மனி ஒருவருக்காக கதறினது. அவர்கள் ஒருவரைப் பெற்றுக் கொண்டனர்.

ஆனால் அதனுடன் அவர்களுக்கு என்ன கிடைத்ததென்று பாருங்கள். பார்த்தீர்களா? உங்களுக்குப் புரிகிறது அல்லவா? அவர்கள் ஹிட்லரைப் பெற்றுக் கொண்டனர். அதனால் அவர்களுக்கு என்ன கிடைத்தது? குழப்பம்.

நீங்கள் தேவனுடைய மேசியாவைப் புறக்கணித்தால், அபிஷேகம் பண்ணப்

பட்ட இந்த மேசியாக்கள் அதைத்தான் உங்களுக்குத் தருவார்கள்.

அவர்களுக்கு என்ன கிடைத்தது? பெந்தெகொஸ்தே ஆசீர்வாதங்கள் ஜெர் மனியில் விழுந்த போது, அவர்கள் செய் தியைப் புறக்கணித்து, அவர்களைக் கேலி செய்து சிறையிலடைத்தனர்.

அவர்கள் என்ன செய்தனர்? அவர்கள் சிலுவையைப் புறக்கணித்து, அதற்கு பதிலாக இரட்டை சிலுவையை - ஸ்வஸ்திகாவை - ஏற்றுக்கொண்டனர்.

நீங்கள் இரக்கத்தைப் பெறவில்லை என்றால், உங்களுக்கு நியாயத்தீர்ப்பைத் தவிர வேறொன்றும் விடப்படவில்லை. நண்பனே, அது உண்மை.

இன்று அவர்கள் எங்குள்ளனர் என் பதைப் பாருங்கள். அவர்கள் எங்கும் உறுப்பினராயில்லை, அவர்கள் சிதறுண்ட வர்களாக இருக்கின்றனர். ஏனெனில் அவர் கள் தவறான மேசியாவை ஏற்றுக்கொண் டனர்.









# பலிபீடத்தின் கீழுள்ள ஆத்துமாக்கள் யார்?

2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து